# மன்னா

CSI தமிழ் திருச்சபை

அலைன்




கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள்
மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும்
பூரணகிருபை உண்டாயிருந்தது. அப் 4 : 32

பொழிவு 13 எப்ரல் 2020 ஆகாரம் 04

# Whats UP in April 2020

| | | |
|---|---|---|
| 3rd Apr<br>11:00 AM - 1:00PM | மாதாந்திர உபவாச ஜெபக்கூடுகை | ஆயர் இல்லம் |
| 3rd Apr<br>7:00PM – 9:00PM | பரிசுத்த திருவிருந்து ஆராதனை | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 05th Apr<br>7:00PM – 9:00PM | குருத்தோலை ஞாயிறு | மஜ்லிஸ் ஹால் |
| 09th Apr<br>6:30PM – 8:00PM | வியாகுல வியாழன் சிறப்பு ஆராதனை | மஜ்லிஸ் ஹால் |
| 10th Apr<br>7:00PM – 9:00PM | புனித வெள்ளி<br>*(சிலுவை தியான ஆராதனை)* | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 12th Apr<br>7:30PM – 9:00PM | உயிர்த்தெழுதல் ஆராதனை<br>*ஈஸ்டர் பண்டிகை* | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 17th Apr<br>7:30PM – 9:00PM | மாலை ஆராதனை<br>*12வது சபை நாள் விழா* | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 18th Apr<br>7:30PM – 9:00PM | பெண்கள் ஐக்கிய சங்கம்<br>*மாதாந்திர ஜெபகூடுகை* | ஆயர் இல்லம் |
| 24th Apr<br>7:00PM – 9:00PM | மாலை ஆராதனை<br>*வருடாந்திரா பொதுக்குழு கூட்டம்* | மெயின் ஒர்ஷிப் ஹால் |
| 30th Apr<br>11:30PM – 12:30AM | மாத இறுதி மற்றும் புதிய மாத துவக்க ஆராதனை | ஆயர் இல்லம் |

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அறிவுறுத்தலின்படி;
சி.எஸ்.ஐ தமிழ் திருச்சபை–அலையின்; நடத்த திட்டமிட்டிருந்த அனைத்து சபை ஆராதனைகள் மற்றும் இதர கூட்டங்கள் அனைத்தும் 17/03/2020 முதல் மறு அறிவிப்பு வரும் வரை ரத்து செய்யப்பட்டுள்ளது

## சி.எஸ்.ஐ தமிழ் திருச்சபை அலைன் ஊழியங்கள் (பொது)

### மெயின் ஒர்ஷிப் ஹால் – ஆலைய வளாகம், அலைன்
### Main Worship Hall – Oasis Hospital Campus, Al-Ain, UAE

| | | |
|---|---|---|
| 1st & 3rd Fridays / வெள்ளி | 7:00 PM | Communion Service /திருவிருந்து ஆராதனை |
| 1st & 3rd Fridays / வெள்ளி | 6:30 PM | Men's Fellowship / ஆண்கள் ஐக்கிய சங்கம் |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 7:00 PM | Evening Regular Service / மாலை ஆராதனை |
| 2nd & 4th Fridays / வெள்ளி | 6:30 PM | Women's Fellowship / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Friday's / வெள்ளிகிழமை | 6:15 PM | CBS/சிறுவர் வேதாகம வகுப்புகள் |


### ஆயர் இல்லத்தில் நடைபெறும் ஊழியங்கள்
### Ministries at Parsonage


| | | |
|---|---|---|
| 1st Friday / வெள்ளி | 11:00AM | Fasting Prayer / உபவாச ஜெபம் |
| 2nd & 4th Sat / சனிக்கிழமை | 7:00 PM | Gospel Ministry / சுவிசேஷ ஊழியம் |
| 3rd Sat / சனிக்கிழமை | 7:30 PM | Women's Prayer / பெண்கள் ஐக்கிய சங்கம் |
| Wednesday's / புதன்கிழமை | 7:30 PM | Bible Study / வேதாகம வகுப்பு |
| Last Day of Every Month<br>மாதத்தின் கடைசி நாள் | 11:30PM | Month End & Beginning Prayer<br>மாத இறுதி/புதிய மாத துவக்கஆராதனை |









# He is Risen

## உள்ளே வாசிக்க..


- ஆயர் மடல்
- திருமறை தியானப்பகுதி
- செயலரிடமிருந்து
- வேதாகம களஞ்சியம்
- மிஷனரி சுயசரிதை
- கட்டுரைகள்
- Facts
- பாடல் பிறந்த கதை
- Children's Corner
- வேத வினாவிடை போட்டி
- பிறந்த/திருமண நாள்
- தெரிந்து கொள்வோம்
- திறப்பிலே ஜெபக்க.
- வேத வாசிப்பு

# ஆயர் மடல்...



அன்புக்குரியவர்களே,

**Good Friday and Easter Greetings !**

கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாகிய நம்மை பாவ அடிமைத்தனத்திலிருந்தும்! ஆவிக்குறிய மரணத்திலிருந்தும்! விடுதலையாக்கி, நமக்கு நித்திய ஜீவனைத் தந்து, நித்திய வாழ்வை உறுதிப்படுத்துகின்ற வரலாற்று நிகழ்வுகள்தான் புனித வெள்ளியும், இயேசு உயிர்த்தெழுந்த பண்டிகையும். நமக்கு இப்படிப்பட்ட உன்னதமான நம்பிக்கையையும், நித்திய வாழ்க்கையையும் தந்த இந்த முக்கிய நாட்களை திருச்சபையாக நாம் ஒன்றுகூடி அனுசரிக்க முடியாமல் Covid-19's exponential spread மூலமாக தடை வந்தவிட்டதே என்று எண்ணி விசுவாசத்தில் சோர்ந்து போகாமல், நாம் இந்த உலகத்திற்குறியவர்களல்ல என்பதை இந்த Self–quarantine காலத்தில் தனித்திருந்து, ஆவிக்குறிய விழிப்போடு, ஜெபத்தோடு வேத வசனங்களை ஆராய்ந்து, தியானிக்க உங்களை அழைக்கிறேன்.

It is not only deadly attack on the Nations but also it is an onslaught on each & every Human being. In this turbulent time, we as believers should not be gripped with panic and anxiety. Instead think deeply about who we are in Christ Jesus. According to II-Timothy 1:7 தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறபடியால்! நாம் யார்? நமக்குள் எப்படிப்பட்ட ஆவியின் வரத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதை உணர்ந்து, இந்த இக்கட்டான காலகட்ட்திலாவது அதை தூண்டியெழுப்பி கிறிஸ்தேசுவின் சித்தத்தை அறிந்து அதற்கேற்றவாறு கிரியை தெய்வமாக!


கர்த்தர் உங்களையும், உங்களுடைய குடும்பத்தையும் இந்த கொள்ளைநோய்பரவும் காலத்திலே தமது செட்டையின் மறைவிலே ஒளித்து, மறைத்துவைத்து, கண்மணிபோல பாதுகாப்பாராக!

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!



இப்படிக்கு உங்கள் ஆயர்,
**Rev. M. Christopher Rajendran...**

# திருமறை தியானப்பகுதி




**கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரணகிருபை உண்டாயிருந்தது. அப்போ 4:33.**

அன்புக்குரியவர்களே!

தாம் இதுவரை நம்பிவந்த இயேசுவை அநியாயமாய் சிலுவையில் கொலைசெய்துவிட்டார்களே, நம்மையும் அவ்விதமாக படுகொலை செய்துவிடுவார்கள் என்பதை நினைத்துப் பார்த்து மரணபயத்தோடு அப்போஸ்தலர்கள் ஒளிந்து கொண்டிருந்தார்கள். மனிதனுக்கு மரணபயம் வந்துவிட்டால் அவனுக்கு சாப்பாடு இறங்காது, தூக்கம்வராது, பயத்தினாலும், நடுக்கத்தினாலும் படபடப்புடன் காணப்படுவான். எவ்வாறென்றால், ஒரு சிறுத்தைப்புலி ஒரு ஆட்டுக்குட்டியை பிடிக்க கிராமத்திற்குள் நுழைந்தது, சிறுத்தையை கண்ட ஆட்டுக்குட்டி தன் உயிரைப்பிடித்துக்கொண்டு மரணபயத்தோடு தலைதெறிக்க ஓடி ஒரு ஆழமான கிணற்றுக்குள் விழுந்துவிட்டது, பின்னால் படுவேகமாக வந்த சிறுத்தையும் அந்த கிணற்றில் விழுந்தது. நாம் நினைப்போம் சிறுத்தை ஆட்டுக்குட்டியை ஒரு சில நொடிகளில் அடித்து சாப்பிட்டு விடுமென்று, ஆனால் பாருங்கள் ஆட்டுக்குட்டி மிக அருகிலிருந்தும் சிறுத்தை மரணபயத்தோடு கிணற்றின்சுவற்றில் ஒட்டிக்கொண்டு மரணபயத்தோடு காணப்பட்டது, மட்டன்பிரியாணி மிக அருகிலிருந்தும், தான் பசியோடிருந்தும், ஆட்டுக்குட்டி பக்கம் திரும்ப வில்லை.

அப்போஸ்தலர்களை மாத்திரம் மரணபயம் விட்டுவைக்குமா? ஆதலால்தான் இயேசு தான் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுவேன் என்று பலமுறை முன்பே சொல்லியிருந்தும், அவர்களது மரணபயம் இயேசுவின் வார்த்தைகளை, வாக்குறுதியை மறக்கடித்தது. மரணபயம் தேவனுடைய வார்த்தைகளை மறக்கச்செய்யும், தேவன்மேலுள்ள விசுவாசத்தையும் பறித்துக்கொள்ளும்.

COVID—19 காட்டுத்தீயைப்போல உலகெங்கிலும் படுதீவிரமாக பரவிக்கொண்டிருக்கிறது. எந்தவிதமான பாகுபாடு இல்லாமல் ராஜா முதல் நடைபாதையில் படுத்துறங்கும் ஏழைவரை கொரோணா வைரஸ் பிடித்துக்கொண்டு, அநேகரை கொன்றுகுவித்து வருகிறது. The whole world reels under corona deadly attack. All are being gripped with fear and panic.

இக்கட்டான இந்த காலகட்டத்தில் தான் விசுவாசிகளாகிய நாம் பதட்டப்படாமல், பயப்படாமல், தைரியமாக நம்மையும், நம்மைச் சார்ந்தவர்களையும், குறிப்பாக நமது பிள்ளைகளையும் கர்த்தருக்குள் பெலப்படுத்த வேண்டும். கொரோணா என்ற சுனாமி பேரலையாய் நம்மை தாக்கவந்தால்; அதைக்கண்டு தப்பியிருக்கலாம், ஆனால் அது இன்றைக்கு நம் கரங்களையே நமக்கு எதிரியாக்கி, நமது முகத்தை நாமே பயத்தோடு தொடும்படி செய்துவிட்டது. It is an invisible enemy to be overcome with the help of Lord and Savior Jesus Christ. He is the only source of our life. As per His Promise John 10: 28 நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்ளமுடியாது என்று ஒரு பெரிய வாக்குறுதியை கொடுத்திருக்கிறார்!

ஆதலால் நாம் உயிரோடு இருந்தாலும், மரித்துப்போனாலும் இயேசுவின் கைகளில் பாத்திரமாகவே என்றென்றுமிருப்போம். காரணம் அவர் உயிர்த்தெழுந்து உயிரோடிருக்கிறார். நம்மை காக்க அவர் வல்லவராயிருக்கிறார் (எபிரேயர்2:14). நம்முடைய மரணபயத்தையும் போக்கியிருக்கிறார். அப்போஸ்தலருடைய மரண பயத்தினால்தான் உயிர்த்தெழுந்த இயேசுவை நம்பவில்லை (Luke24:9-12) .பின்னர் தங்கள் கண்களால் கண்டபின்தான் நம்ப ஆரம்பித்தார்கள். அதோடுகூட பரிசுத்த ஆவியை பெந்தெகொஸ்தே நாளிலே தரித்துக்கொண்ட பிற்பாடுதான் உயிர்த்தெழுந்த இயேசுவைப்பற்றி பலமாய், தைரியமாய், மரணபயமில்லாமல் ராஜாக்களுக்கு முன்பாக, அதிகாரிகளுக்கு முன்பாக சாட்சிகொடுத்து தங்கள்மேல் தேவனுடைய பூரணகிருபை விளங்கும்படி வாழ்ந்து காட்டினார்கள். ஆதலால் நாமும் அவர்களை பின்பற்றி மரணபயமின்றி எத்தகைய கடினமான சூழ்நிலையிலும் உயிர்த்தெழுந்த இயேசுவுக்கு பலமாய் சாட்சி கொடுப்போமாக.

இப்படிக்கு
உங்கள் அன்பு ஆயர்,
**Rev. M. Christopher Rajendran**




Happy Easter 2020

# செயலரிடமிருந்து...

கிறிஸ்துவுக்குள் எனதருமை உடன் விசுவாசிகளே...

ஒவ்வொரு மாதமும் உங்களை இம்மடல் மூலம் தொடர்பு கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கர்த்தர் கொடுத்த இந்த மேலான கிருபைக்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். தம்மைத்தாமே வெறுமையாக்கி தம்மைத்தாமே தாழ்த்தினதினால் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை தரித்துக் கொண்ட ஆண்டவரும் மீட்பரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் வாழ்த்துக்கள்..! நம்மை வெற்றிச்சிறக்க பண்ணுகிற வரும் பர்வதங்களையும் மெழுகு போல் உருகப்பண்ணி தடைகளை அகற்றுபவராக முன்செல்லும் சேனைகளின் கர்த்தரின் நாமத்தில் உங்களுக்கு என் ஈஸ்டர் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமதாவிக்குரிய வாழ்க்கையில் பல உருமாற்றங்களை கொண்டு வருகிற இந்த லெந்து காலத்தை மனமகிழ்ச்சியுடன் வரவேற்று, இந்த மாதத்தில் தேவனை நெருங்கி ஜீவிக்க, தவறான வாழ்க்கையை முறையை வெறுத்தொதிக்கிவிட்டு, கிறிஸ்துவுக்குள் ஒரு தவ வாழ்க்கையை இந்த புதிய மாதத்தில் மேற்கொண்டு ஆவிக்குரிய வாழ்வில் உருமாற்றம் பெற முயற்சி செய்வோம். 2020-21 புதிய கல்வி ஆண்டில் கடந்து செல்ல இருக்கும் நம்முடைய பிள்ளைகள் யாவரையும் ஆண்டவர்தாமே தம்முடைய பரத்தின் ஞானத்தினால் நிறைத்து ஆசீர்வதிப்பாராக. தேர்வு எழுதி இருக்கிற பிள்ளைகள் நல்ல மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறவும் உயர் கல்விக்காக பெற்றோர் எடுக்கும் முயற்சியில் கர்த்தரின் கிருபை உடனிருக்கவும் ஜெபிப்போம்.

நாம் அனைவரும் அறிந்தபடி, திருச்சபை நடத்த திட்டமிட்டிருந்த அனைத்து சபை ஆராதனைகள் மற்றும் இதர கூட்டங்கள் அனைத்தும் 17/03/2020 முதல் மறு அறிவிப்பு வரும் வரை தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது. நாம் வீட்டிலே அனுதினம் துதித்து, ஆராதித்து, ஜெபித்து, வேதம் தியானித்து ஆவியில் வளரந்து, எழுப்புதலுக்கு ஆயத்தமாவோம். 1பேதுரு 4:7ன் படி, எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிரு 'ங்கள். நாமே தேவனுடைய ஆலயம்.

ஜெபத்தினாலும் தியாக–உற்சாக காணிக்கைகளினாலும் இவ்வுழியத்தை தாங்கி வருகிற உங்களுக்கு, கர்த்தர் தெய்வீக சமாதானத்தை அருளுவதோடு தமது செட்டைகளின் நிழலில் உங்களை பாதுகாத்து மகிமையினாலும் கனத்தினாலும் உங்களை முடிசூட்டுவார். அனைவரோடும் கர்த்தருடைய பாதுகாப்பும் அரவணைப்பும் இருக்கவேண்டும் என்று சொல்லி ஜெபிப்போம், ஜெபிக்கிறோம்...


**அன்புடன் கிறிஸ்துவின் பணியில்**

**சுரேஷ் ராஜன்**

# அப்போஸ்தலர் நடபடிகள்- சொல் பொருள்

| எண் | சொல் | பொருள் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | ஆதினம் | அதிகாரம் | 1:7 |
| 2 | அநீதி | நீதிக்குப் புறம்பானது, அநியாயம் | 1:18 |
| 3 | சடிதி | விரைவாக, தாமதமின்றி | 2:2 |
| 4 | உபாதி | துன்பம், வேதனை, தடை, நோய் | 2:24 |
| 5 | கரடு | வளர்ச்சி குன்றியது | 3:7 |
| 6 | உபகாரம் | உதவி, நன்மை | 4:9 |
| 7 | கிரயம் | விலைப்பணம் | 4:34 |
| 8 | அவம் | பயனின்மை, வெற்றுநிலை | 5:36 |
| 9 | தர்க்கம் | விவாதம் | 6:9 |
| 10 | பிச்சு | பித்து, பைத்தியம் | 8:23 |
| 11 | நிருபம் | கடிதம், மடல் | 9:2 |
| 12 | கைலாகுகொடு | உடல்வலி அற்றவருக்குக் கைக்கொடுத்துத் தாங்கு | 9:8 |
| 13 | திருஷ்டாந்தம் | மெய்பித்து, எண்பித்து | 9:22 |
| 14 | எத்தனம் | முயற்சி, முன்னேற்பாடு, ஆயத்தம் | 9:29 |
| 15 | பட்டாளம் | இராணுவம், போர்ப்படை, கூட்டம், திரள் | 10:1 |
| 16 | கபடம் | வஞ்சகம் | 13:10 |
| 17 | பரேதசி | அன்னியன் | 13:17 |
| 18 | அமளி | கூச்சலும் குழப்பமும், ஆரவாரம் | 14:5 |
| 19 | பூஜாசாரி | அர்ச்சகர் | 14:13 |
| 20 | பிரயத்தனம் | முயற்சி, விடாச்செயல், பெருமுயற்சி | 16:7 |
| 21 | யுக்தி | செயல் நிறைவேற்றத்திற்கான வழிமுறை உத்தி, திட்டம் | 17:29 |
| 22 | விகற்பம் | வேறுபாடு, கருத்து வேறுபாடு, மனக்கோணல், தவறான கண்ணோட்டம் | 18:13 |
| 23 | கிரமம் | ஒழுங்கு, முறைமை, பாங்கு, ஒழுங்குமுறை, நன்னெறி | 18:23 |
| 24 | சாதுரியம் | சாமர்த்தியம், அறிவு நுட்பம், கூர்மதி | 18:24 |
| 25 | வித்தியாசாலை | வித்தியாலயம், கல்விச்சாலை, பள்ளி | 19:9 |
| 26 | உறுமால் | தைலப்பாகை, முண்டாசு | 19:12 |
| 27 | கச்சை | அங்கியின் இடுப்புப் பட்டை | 19:12 |
| 28 | தேசாந்தரரி | அயல்நாட்டவன் | 19:13 |
| 29 | அரங்கசாலை | நாடக, நாட்டிய மேடை | 19:29 |
| 30 | சம்பிரதியானவன் | அவைத்தலைவன், ஆணையர் | 19:35 |
| 31 | பரிசாரகன் | கோவில் பணியாள், கோவில்,திருமணவீடு போன்றவற்றில் சமையல் செய்பவர் | 19:35 |
| 32 | சேனாபதி | படைத்தலைவன், தளபதி | 21:31 |
| 33 | தீது | தீமையானது, தீமை தருவது, குற்றம், பாவச்செயல் | 23:5 |
| 34 | சர்ப்பனை | வஞ்சகம், ஏமாற்று, கபடம் | 23:16 |
| 35 | பிராது | முறையீடு, புகார் | 24:1 |
| 36 | யதார்த்தம் | வெளிப்படை, நடைமுறையிலானது, ஒளிவு மறைவற்றது | 24:9 |
| 37 | ரூபி | மெய்ப்பி, உறுதிப்படுத்து | 24:13 |
| 38 | அபத்தம் | அறிவுக்கு ஒவ்வாதது, பொருத்தமற்றது, குற்றம், வழு | 25:11 |
| 39 | அபயம் | அடைக்கலம், பாதுகாப்பு, அச்சமின்மை | 25:11 |
| 40 | தளவாடம் | போர்த் தொழிலுக்கான கருவிகள், தொழிலுக்குத் தேவையான செயற்கருவிகள் | 27:19 |
| 41 | சுக்கான் | கப்பலைத் திசை திருப்பும் கருவி | 27:40 |
| 42 | விஸ்திரி | விரிவாக்கு | 28:23 |

**தெரிந்து கொள்ளுங்கள் ... பகிர்ந்து கொள்ளுங்கள் ...**




இத்தாலி நாட்டிலிருந்து இந்தியா வந்து ஒரு முறை தமிழ் மொழியை கற்று தமிழ்நாட்டை தாய் நாடாக போற்றி, தமிழ் மக்களை தமது மக்களாக பாராட்டி, திருமறை செல்வராக, தமிழ் அறிஞராக, பன்மொழிப் புலவராக, ஓவியக் கலைஞராக, இசை ஆர்வம் மிகுந்தவராக, கலை அறிவும் குணநலனும் மிகுந்தவராக கிறிஸ்துவின் சேவையை வாழ்நாள் முழுவதும் உற்சாகமாக செய்தவரே ஜோசப் பெஸ்க்கி.

மதுரை மாவட்டத்தில் 1711 ஆம் ஆண்டு வந்தார். தமிழரோடு தமிழராய் வாழ்ந்தார் உணவிலும், உடையிலும், பழக்கத்திலும் வேறுபாடின்றி வாழ்ந்தார் ஜோசப் பெஸ்கி என்ற பெயரை தைரியநாதர் என மாற்றிக் கொண்டார்.மக்கள் இவருடைய துணிவை கண்டு வீரமாமுனிவர் என வியந்து போற்றினர். ஆங்கிலம், பிரெஞ்ச், லத்தீன், தமிழ், தெலுங்கு, கன்னடம், ஆரியம், இந்துஸ்தானி போன்ற மொழிகளை கற்றுத் தேர்ந்தார். தமிழ் மொழியிலுள்ள உன்னத அனுபவங்களை அடைந்தார்.

கிறிஸ்தவ ஆலயங்கள் மட்டுமல்லாமல் கிறிஸ்தவர்களும் சீர்குலைந்து கிடந்ததை கண்டு மனம் வருந்தினார் எனவே புதிதாக ஆலயங்களைக் கட்டினார் இவரின் எளிய வாழ்வால் பலர் கிறிஸ்துவைக் கண்டுகொண்டனர். தமிழ் மொழிக்கு மாபெரும் அருட்கொடைகளை வழங்கியவர் வீரமாமுனிவர். கவிதைகள், இலக்கணப் புத்தகங்கள் உரைநடைகள் அகராதிகள், ஆய்வு நூல்கள் என பல நூல்களை வெளியிட்டார். பரமார்த்தகுரு கதைகள்

என்பதை இவரின் அற்புத படைப்பு. கிறிஸ்துவின் அன்பை எளிமையாகவும் இனிமையாகவும் போதிப்பதில் சிறந்தவர்.


உவமைகளால் உண்மைச் செய்தியை திறம்பட கூறி, அநேகரை கிறிஸ்துவின் தொண்டராக மாற்றினார் சமயத் தொண்டிலும் தமிழ் தொண்டிலும் 37 ஆண்டுகள் திறம்பட பணியாற்றிய இவர் ஒரு பல்துறை வித்தகர். அவர் சொல்கிறார்…

**பொன்னை மாதரை பூமியை நாடினேன்,**

**என்னை நாடிய இன்னருள் நாதனே…!!!**

இதைக் கேட்கிற சகோதரனே சகோதரியே…உன் வசதி வாய்ப்புகளை விட்டு ஆண்டவர் காட்டும் இடத்திற்குச் செல்ல நீ ஆயத்தமா..? கிறிஸ்துவின் அன்பு உன்னை நெருக்கிய வில்லையோ..? நம் திறமைகள் அனைத்தும் திருச்சபையின் வளர்ச்சிக்காக பயன்படுத்துகிறோமா..?

---












# சிலுவையை பற்றிய சில அரிய உண்மைகள்

**(Released by OX Ford University Research Students)**



- இயேசு கிறிஸ்து சுமந்த சிலுவையின் எடை 150 கிலோ நீளம் 15 அடி அகலம் 8 அடி.
- இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் அறையப்பட்ட ஆயணியின் நீளம் 8 அங்குலம் அகலம் ¾ அங்குலம்.
- இயேசு கிறிஸ்துவின் உயரம் 5 அடி 11 அங்குலம் எடை 85 கிலோ.
- இயேசு கிறிஸ்து நடந்து வந்த போது 3 முறைத்தடுமாறி கீழே விழுந்தருக்கிறார்.
- இயேசு கிறிஸ்து 17 மணி நேரம் தண்ணீர் இல்லாமல் அவதிப் பட்டிருக்கிறார்.
- இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் மொத்தம் ஏற்பட்ட காயங்கள் 5480.
- இயேசு கிறிஸ்துவின் சரீரத்தில் இருந்து கசிந்த இரத்தத்தின் அளவு ஏறத்தாள 6.5 லிட்டர்.
- இயேசு கிறிஸ்துவை ஜெருசலேம் வீதி வழியாக 350 சேவகர்களும் 50 குதிரை வீரர்களுமாக இழுத்துச்சென்றனர்.
- யூத கால அட்டவணையின் படி அக் அபூர்வே கோன்ஜீதா 785 நிசான் 15 அன்று மரித்தார். நாம் பின்பற்றும் கால அட்டவணையின்படி கிபி 30 ம் ஆண்டு 7 ம் தியதி மரித்தார்.
- சிலுவையில் பொறிக்கப்பட்டிருந்த **INRI** என்ற லத்தீன் வார்த்தையின் விரிவாக்கம்

**I - IESUS | N – NAZARINE | R – REXO | I – IDONEUS**

அதன் பொருள் - "நசரேயனாகிய இயேசு யூதருக்கு ராஜா"

மருத்துவராகிய லூக்கா இயேசு மரித்தார் என்று சான்றிதள் வழங்கினார்.


*M. Nesamony*

# ஆகாரின் கொடூரம்...



தன் வீட்டை எப்படியாவது கட்ட நினைத்த சாராளின் முடிவினால், ஆகார் என்ற அடிமைப்பெண் எகிப்திலே ஆபிரகாமுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்ட பணிப்பெண் ஆபிரகாமின் மனைவியாகிறாள் (ஆதி16:12,16). தான் உயர்த்தப்பட்டபோது உயர்வுக்கு காரணமான எஜமாட்டியை அவள் அற்பமாக எண்ணிய போது வந்தது ஆபத்து. சாராளின் அன்பு உபசாரம் இப்போது அடிக்கும் காரணங்களாக மாறுகிறது வீட்டைவிட்டு துரத்துகிறது ஓடிப்போனவளை தேவன் திசைதிருப்புகிறார். (ஆதி 16:5-9).

இந்த இணைப்பினால் பிறக்கப்போகும் குழந்தை துஷ்ட மனிதன் எல்லோருக்கும் விரோதமானவன் (ஆதி 16:12). ஏனென்றால் நான் முன்னதாக குறிப்படதைப்போன்று பயத்தில் பீதியில் நிலைக்குமா நிலைக்காதா என்ற நிலையற்ற சூள்நிலையில் ஆகார் ஆபிரகாமோடு உறவு கொள்கிறாள் அதனால் குழந்தை கிடைக்கிறது. இந்த குழந்தையினை இஸ்மவேலை காட்டுகழுதை என்றே வேதம் அழைக்கிறது. ஆனால் அவள் தன் பிள்ளையையும் சரியாக வளர்கவில்லை. ஆபிரகாம் இவளை நேசித்ததையும். இஸ்மவேலை நேசித்ததையும் வேதம் விளக்காமலில்லை (ஆதி. 21:11,17,18).



புதிமுன்று வயது இளையவனான ஈசாக்கை இஸ்மவேல் பரிகாசம் செய்து மகிள்கின்றான். இதனை கலாத்தியர் 4:29 துன்பப்படுத்தினான் எனறே கூறுகிறது. அல்லது பயமுறுத்தியிருக் கலாம், கெடுத்துப்போட பார்த்தான் என்றே யூத பாரம்பர்யம் கூறுகின்றது. அல்லது விளையாட்டாகவே கொல்லப்பார்த்ததாக சிலர் நம்புகின்றனர். இதற்க்கு காரணம் யார்? பிறப்பிலிருந்தே பாலுண்ண கொடுக்கும் போது விஷவார்தைகள் கொடுத்து விட்ட ஆகார். எனவே ஆகாரின் அழுகையை அல்ல பிள்ளையின் சத்தத்தையே தேவன் கேட்டார் என்று வேதம் கூறுகிறது. (ஆதி. 21:17).

உயர்த்தப்பட்ட நிலையில் ஆபிரகாமுக்கு மனைவியாக்கப்பட்ட அவள் ஆபிரகாமின் தேவபக்தியின் நிமித்தம் பிள்ளையின் மேலும் ஆசீவாதம் உண்டாகும் என்பதை காணக்கூடாத ஆகார். (ஆதி. 21:13) வித்தியாசமான மனநிலையை பிள்ளையில் உருவாக்கிவிட்டாள். யாரோ ஒருவர்மேல் உள்ள கசப்பினை (அது ஒருவேளை மாமியாரின் மீதாக இருக்கலாம், அவர்கள் தன் புருஷனை பெற்று வளர்த்து படிக்கவைத்து பேணி பாதுகாத்து தந்தார்கள் என்பனை மறக்கும் மருமக்களுக்கு) வேறு வழியில் பலன் தீர்கும் துணைவிமார் எத்தனைபேர். பிள்ளையின் உள்ளத்தினை பாழாக்கி தாத்தா, பாட்டி. சித்தி, சித்தப்பா, மாமா, அத்தை போன்ற உறவினர்களை கெடுத்து போட்டவர்கள் ஏராளம். கூடவே அதனைக்கடத்தி விட்டு கோர்ட், கச்சேரி என்று அலையவைத்து நிரந்தர பகையை உருவாகியவர்கள் ஏராளம்.



இனம் இனத்தோடு தான் சேரும் என்பதுபொல தனது மகனுக்கு எகிப்து தேசத்தாளை மணமுடிக்கிறாள். தேய்வபயமற்ற எகிப்திற்க்கு அவனை இணைத்து விடுகிறாள். இஸ்மவேல் பெரிய ஜாதியாக இருந்தாலும் பிரபுக்களை உடையவனாக இருந்தாலும்,

தன்சகோதரருக்கு எதிராக மாறிவிட்டான் அல்லது தன் தாயால் மாற்றப்பட்டுவிட்டான்.

**ஆன்பானவர்களே! நாமும் ஜாக்கிரதையாக இருப்போம் நம் மனதில் காணப்படும் வெறுமை, வெறுப்பு, ஏமாற்றம் நம்முடைய பிள்ளைகளின் வாழ்வினையும் பாழாக்கி விடாமலிருக்க பர்த்துக் கொள்வோம். அதின் பலன் மிக மிக கொடியது என்பதனை உணர்ந்து எக்கரிக்கையுடன் இருக்க கற்றுகொள்வோம்.**

**- நெல்சன் சோபித ராஜ்.**




Sunrise is *NOT* Locked down
Love is *NOT* Locked down
Kindness is *NOT* Locked down

Relationship is *NOT* Locked down
Family time is *NOT* Locked down

Reading is *NOT* Locked down
Praying is *NOT* Locked down
Meditation is *NOT* Locked down

Creativity is *NOT* Locked down
Learning is *NOT* Locked down
Conversation is *NOT* Locked down
Imagining is *NOT* Locked down

Work from home is *NOT* Locked down
Hope is *NOT* Locked down
Sleeping is *NOT* Locked down



**LOCKED DOWN IS AN OPPORTUNITY... TO THANK, GROW & PRAISE GOD...**

## இங்கிலாந்தை அசைத்த தேவ மனிதர் ஜான் வெஸ்லி கிறிஸ்தவர்களுக்கென்று நியமித்த 12 ஒழுங்குகள்.

1. எல்லாக் காரியத்தையும் தேவ சித்தத்தின்படி செய்...

2. ஊக்கமும் சுறுசுறுப்பும் உள்ளவனாயிரு. ஒருபோதும் சும்மாயிராதே. உன் கரங்கள் எப்போதும் ஏதாவது ஒரு பயனுள்ள வேலையில் ஈடுபட்டிருக்கட்டும். காலத்தை வீணாக்காதே. தேவையான இடத்தில் அவசியமான அளவு நேரத்தை விட எவ்விதத்திலும் கூடுதலான நேரத்தைச் செலவிடாதே.

3. மிகவும் விழிப்புள்ளவனாயிரு. "கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்பதே உன் வாழ்வின் சட்ட வாக்கியமாய் இருக்கட்டும். எல்லா வெதுவெதுப்பையும், கேலி பேசுதலையும், முட்டாள்தனமான பேச்சையும் உன்னை விட்டு அகற்று.

4. பெண்களுடன் உரையாடுகையில் உன் உரையாடல் மிகவும் சுருக்கமானதாகவும், குறுகிய நேரமுடையதாகவும் இருக்கட்டும். முக்கியமாக இளம் பெண்களுடன் நீ சம்பாஷிக்கையில் மிகவும் ஞானத்தோடு நடந்து கொள்.

5. கிறிஸ்துவுக்குள் உன்னை விட அனுபவமுள்ள சகோதரர்களிடம் ஆலோசனை கேட்காமல் உன் திருமண காரியத்தில் எந்த முடிவும் எடுத்துவிடாதே.

6. உன் சொந்தக் கண்கள் காணாதிருக்க, யாரைக்குறித்தும் பேசப்படும் தீமையானவற்றை ஒருபோதும் நம்பாதே. எல்லாவற்றையும் அடிப்படையிலிருந்து சோதித்துப் பார்.

7. எந்த மனிதனைக் குறித்தும் தீமையானதைப் பேசாதிரு. உன் வார்த்தைகள் கேன்சரைப் போல அரித்துப்போடும் என்பதை நினைவில் வைத்துக் கொள். சம்பந்தப்பட்ட நபரைச் சந்திக்கும்வரை உன் எண்ணங்களை உனக்குள்ளாகவே அடக்கி வைத்துக்கொள்.

8. யாரிடமாவது தவறைக் கண்டால் உடனடியாக நேருக்கு நேர் சுட்டிக்காட்டு. உன் மனதிலிருந்து பகை என்னும் நெருப்பை மிகச்சீக்கிரம் எடுத்துப் போடு.

9. பாவத்தைத் தவிர வேறு எதற்கும் வெட்கப்படாதே.

10. அழியும் ஆத்துமாக்களைக் காப்பதே உன் தலையான கடமை, எனவே இதற்காக நீ செலவு செய்வதுடன் செலவு செய்யப்படவும் ஆயத்தமாயிரு.

11. எல்லாவற்றையும் குறிப்பிட்ட நேரத்தில் செய். எல்லாவற்றிலும் ஒழுங்கைக் கடைப்பிடி. அவைகளைத் தேவ கோபாக்கினைக்கும் சபையின் கட்டுப்பாட்டுக்கும் பயந்து அல்ல, மனசாட்சியினிமித்தம் பற்றிக்கொள்.

12. கவனி! பல தடவைகள் பிரசங்கிப்பது மட்டும் உன் கடமையல்ல, எத்தனை ஆத்துமாக்களை மீட்க முடியுமோ அத்தனைபேரையும் மீட்டு அவர்களை மனந்திரும்புதலுக்கு நேராக வழிநடத்தி, உன் முழு பெலத்தோடும் அவர்களைப் பரிசுத்தத்தில் ஊன்றக்கட்டு; ஏனெனில் பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிக்க முடியாதே!




Did you KNOW?

# Bible Translation Comparison







if you don't have time to pray & read scriptures, you are busier than God ever intended you to be.

## WORD FOR WORD

*A WORD-FOR-WORD translation is one that does its best to accurately translate each of the Hebrew, Aramaic, and Greek wordsof the original Scriptures. The King James, New King James, and English Standard Version are popular word-for-word translations.*

- INTERLINEAR
- NEW AMERICAN STANDARD (NASB)
- AMPLIFIED BIBLE (AMP)
- ENGLISH STANDARD VERSION (ESV)
- REVISED STANDARD VERSION (RSV)
- KING JAMES VERSION (KJV)
- NEW KING JAMES VERSION (NKJV)
- CHRISTIAN STANDARD BIBLE (CSB)

## THOUGHT FOR THOUGHT

*A THOUGHT-FOR-THOUGHT translation examines the whole sentence rather than word-for-word and gives an easily readable translation. The New Living Translation and The New International versions are popular thought-for-thought translations.*


- NEW REVISED STANDARD VERSION (NRSV)
- NEW AMERICAN BIBLE (NAB)
- NEW INTERNATIONAL VERSION (NIV)
- TODAY'S NEW INTERNATIONAL VERSION (TNIV)
- NEW CENTURY VERSION (NCV)
- NEW LIVING TRANSLATION (NLT)

## PARAPHRASE

*A PARAPHRASED translation uses modern language and idioms to get the thought of the verse across to the reader. The goal is to create a literary work and not necessarily a direct interpretation of the original Biblical text.*

- NEW INTERNATIONAL READERS VERSION (NIRV)
- GOOD NEWS TRANSLATION (GNT)
- CONTEMPORARY ENGLISH VERSION (CEV)
- THE LIVING BIBLE (TLB)
- THE MESSAGE (MSG)

# பாடல் பிறந்த கதை




## இன்று கிறிஸ்து எழுந்தார்... அல்லேலூயா!

இன்று கிறிஸ்து எழுந்தார்
அல்லேலூயா!
இன்று வெற்றி சிறந்தார்;
அல்லேலூயா!
சிலுவை சுமந்தவர்
அல்லேலூயா!
மோட்சத்தைத் திறந்தவர்
அல்லேலூயா!

ஸ்தோத்ரப் பாட்டுப் பாடுவோம்
அல்லேலூயா!
விண்ணின் வேந்தைப்
போற்றுவோம்
அல்லேலூயா!
அவர் தாழ்ந்துயர்ந்தாரே;
அல்லேலூயா!
மாந்தர் மீட்பர் ஆனாரே,
அல்லேலூயா!

பாடநுபவித்தவர்,
அல்லேலூயா!
ரட்சிப்புக்குக் காரணர்;
அல்லேலூயா!
வானில் இப்போதாள்கிறார்;
அல்லேலூயா!
தூதர் பாட்டைக் கேட்கிறார்
அல்லேலூயா!

லண்டன் நகரில் வசித்து வந்த சார்ல்ஸ் வெஸ்லி (Charles Wesley) என்பவர் அங்கே உள்ள ஆல்டர்ஸ்கேட் (Aldersgate) வீதியில் நடந்த ஒரு ஆவிக்குரிய கூட்டத்தில் வேண்டாவெறுப்பாகக் கலந்துகொள்ள நேரிட்டது. அங்கே கொடுக்கப்பட்ட செய்தியைக் கேட்டு அவருக்கு ரட்சிப்பின் அனுபவம் ஏற்பட்டு, பாவமன்னிப்பின் நிச்சயம் பெற்றவராய், ஆண்டவருக்கு தன் வாழ்வை அர்ப்பணித்தார்.

லண்டன் நகரத்தில் வெஸ்லியைச் சேர்ந்தவர்கள் தங்கள் முதல் ஆலய ஆராதனையை ஒரு பாழடைந்த இரும்பு ஆலையில் ஆரம்பித்தனர். சார்ல்ஸ் வெஸ்லியின் ஆல்டெர்ஸ்கேட் ரட்சிப்பு அனுபவத்திற்குப் பின் ஓராண்டுக்குள்ளாகவே, 1739ல் இவ்வாலயம் செயல்படத்துவங்கியது. இவ்வாலயத்தின் முதல் ஆராதனைக்கென்று சிறப்புப்பாடலாக சார்ல்ஸ் 'இன்று கிறிஸ்து எழுந்தார்' எனும் இப்பாடலை எழுதினார்.

இந்த இரும்பு ஆலை ஆலயத்தில் வெஸ்லியினர் கூடிய நாட்களில், சார்ல்ஸ் பல புதுப்பாடல்களை எழுத அனைவரும் அவ்வாராதனைகளில் உற்சாகமாகப் பாடினார்கள். இவையனைத்தும் தொகுக்கப்பட்டு, ஒரு பாடல் புத்தகமாக 'இரும்பு ஆலைப்


பாடல்கள்' என்ற தலைப்பில் வெளிவந்தது. இப்புத்தகத்தில் இப்பாடலும் 'உயிர்த்தெழுந்த நாள் பண்டிகைப் பாடல்' என்ற தலைப்புடன் சேர்க்கப்பட்டது. அதில் நான்கு வரிச் சரணங்கள் இருந்தன.




பதினேழாம் நூற்றாண்டில் சார்ல்ஸ் வெஸ்லி இப்பாடலை எழுதினபோது இதில் வரிகளுக்கு இடையில் வரும், 'அல்லேலூயா' என்ற வார்த்தை இல்லை. ஆனால், பின்னர் வெளிவந்த ஒரு பாடல் தொகுப்பில், அதின் நூலாசிரியர், உற்சாக தொனியோடு கர்த்தரைத் துதித்துப் பாட இதைச் சேர்த்தார்.


இந்த பாடலுக்கு 'ஈஸ்டர் பாடல்' (Easter hymn) என்ற ராகம் இணைக்கப்பட்டது. இதை அமைத்தவர் யாரென்று தெரியவில்லை.


சார்ல்ஸ் வெஸ்லி எழுதிய மற்றொரு பண்டிகைப்பாடல் 'கேள் ஜென்மித்த ராயர்க்கே' என்ற பாடலாகும். இப்பாடலின் இசையும், நாம் தூதருடன் சேர்ந்து கெம்பீரித்துப் பாடும் தொனியில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடப்பட்டது.







# சிறுவர் பகுதி / Children's Corner





KIDS CORNER




# Coloring Page-1 (Kin/Beg)



# Palm Sunday

**Your Name Here:**

# Coloring Page-2 (Kin/Beg)




**Your Name Here:**

# Exile Is Coming!: Spot the Differences

Compare the picture on the top with the picture on bottom. Circle the 11 things that are different.



**Kin / Beg / Primary**



**Your Name Here:**

Beg / Primary

# Coded Words for Exile Is Coming!

Each number stands for a letter of the alphabet.
Write the correct letter in the blank to find the coded words and phrase.

___ ___ ___ ___ ___ ___ ___
2 1 2 25 12 15 14

___ ___ ___ ___ ___ ___ ___
19 5 22 5 14 20 25

___ ___ ___ ___ ___ ___ ___
16 18 15 13 9 19 5

___ ___ ___ ___
15 2 5 25

**Code key**

| | | |
|---|---|---|
| A 1 | J 10 | S 19 |
| B 2 | K 11 | T 20 |
| C 3 | L 12 | U 21 |
| D 4 | M 13 | V 22 |
| E 5 | N 14 | W 23 |
| F 6 | O 15 | X 24 |
| G 7 | P 16 | Y 25 |
| H 8 | Q 17 | Z 26 |
| I 9 | R 18 | |

**PHRASE:**

___ ___ ___ ___ ___ ___ ___ ___
10 5 18 5 13 9 1 8

___ ___ ___ ___ ___ ___ ___ ___ ___
20 15 12 4 5 24 9 12 5

___ ___ ___ ___ ___ ___ ___ ___
23 1 19 1 8 5 1 4


Your Name Here:

# Bible Cross Word-1

The resurrection of Jesus Christ

from the Books of Matthew and Mark

**Primary / Junior**



**Across**

1 where they laid Jesus after He died (Matt.27:60)

4 the place where Jesus died (Matt.27:33)

5 Jesus and two thieves were ______ together (Matt.27:38)

8 mother of Jesus

9 The angel said "He is ____ He is not here" (Mark 16:6)

10 They made Jesus wear a scarlet _____ (Matt.27:28)

12 Jesus was betrayed for _____ pieces of silver (Matt.27:3)

14 Jesus was ____ of any crime (Matt.27:4)

15 The 12 companions of Jesus

**DOWN**

2 Jesus shed His ____ for our sins

3 Judas Iscariot ____ Jesus (Matt.27:4)

5 Roman commander of a hundred men (Matt.27:54)

6 Jesus said " My God, My God why hast thou ____ me" (Matt.27:46)

7 a title of Jesus (it means anointed one) (Matt.27:17)

11 They laid the ____ of Jesus in a tomb (Matt.27:59)

12 Jesus wore a "crown of ____"

13 our Lord and Saviour


Your Name Here...

# Bible Cross Word-2

# The Last Supper Crossword Puzzle

**Primary / Junior**






## ACROSS

2. The holiday that Jesus and His friends celebrated.
4. A name for the friends of Jesus
7. The number of Jesus' friends
9. The city where Jesus and His friends ate the meal.
10. Jesus said it represented His blood.

## DOWN

1. __________ of sins
3. Something to drink from
5. Not morning
6. Jesus said that this man would betray Him.
8. Jesus said it represented His body.

Your Name Here...

# Bible Quiz
# Crucifixion & Resurrection

**Primary & Above**

**1.) Why did people want to kill Jesus?**
**A]** He was mean to them **B]** He wanted to kill them
**C]** He said He was the Son of God **D]** He lied to them

**2.) After Jesus died, what did His friends do to His body?**
**A]** put it in a tomb **B]** bury it under the ground

**3.) On what day did Jesus come back to life?**
**A]** the 1st day **B]** the 365th day **C]** the 3rd day

**4.) What is it called when a person comes back to life after they have died?**
**A]** resurrection **B]** confrontation **C]** transfiguration

**5.) Who did Jesus talk to first after He came back to life?**
**A]** King David **B]** Abraham **C]** Mary Magdalene **D]** Moses

**6.) On which holiday do people celebrate Jesus coming back to life?**
**A]** Easter **B]** Christmas **C]** Good Friday **D]** Maundy Thursday



**7.) Who pushed the stone away from Jesus' tomb?**
**A]** Peter **B]** angels **C]** a soldier **D]** Mary

**8.) Who was the first person to see Jesus after He was resurrected?**
**A]** Jane of Arimathea **B]** Janet of Tiberius **C]** Mary Magdalene **D]** Jill of Galilee



**9.) With what was Jesus' side pierced?**
**A]** Sword **B]** Knife **C]** Spear **D]** Axe

**10.)In what was Jesus wrapped before he was buried?**
**A]** Goat skins **B]** Linen clothes **C]** Sheep skins **D]** Golden robes

**11.) Which disciple wanted to see the imprint of the nails before he would believe?** **A]** Andrew **B]** Thomas **C]** James **D]** Bartholomew

**12.)For how long did Jesus remain after his resurrection before he ascended into heaven?** **A]** 7 days **B]** 14 days **C]** 40 days **D]** 49 days

Your Name Here...

**Primary & Above**

# Biblical Math's... Try it...

This is a Bible Maths quiz and each part of the question can be represented by a number and then, for example, multiplied or added with another part of the question to give the final answer. Answer the questions using only numerical characters

| S.N | Question | Answer |
|---|---|---|
| 1 | (Sons of Jacob) multiplied by (number of Jesus' disciples) | |
| 2 | (Books of the Bible) minus (days of rain on Noah in his ark) | |
| 3 | (Number of fish caught by Simon Peter in miraculous catch) plus (days of creation) | |
| 4 | (Times that the priests walked round Jericho) multiplied by (plagues upon Egypt) | |
| 5 | (Days that Jesus fasted in the wilderness) divided by (number of gospel writers) | |
| 6 | ((Number of Psalms) plus (tribes of Israel)) all divided by (number of gifts brought to Jesus by the wise men) | |
| 7 | (Number of people saved from the flood) multiplied by (number of others crucified with Christ) | |
| 8 | (Age of David when he became King of Israel) plus (number of years that David reigned) | |
| 9 | ((Number of times Naaman dipped himself in the River Jordan) minus (number of true Gods)) all multiplied by (pieces of silver that Jesus was betrayed for) | |
| 10 | (Talents given out by the master in the parable) plus (virgins who had enough oil for their lamps) minus (number of gates of New Jerusalem) | |
| 11 | What's the answer when you take the number of commandments given by God to Moses on Mount Sinai and subtract the number of demons Jesus drove out of Mary Magdalene? (Exodus 20:1-17 and Mark 16:9) | |
| 12 | What's the answer when you take the age of Moses when he first appeared before the Pharaoh to seek permission for the Israelites to leave Egypt and subtract the number of fish a little boy provided to Jesus to feed the multitude? (Exodus 7:7 and John 6:9) | |
| 13 | What's the answer when you take the number of pieces of silver Joseph's brothers sold him for and add on the number of books addressed to Timothy in the New Testament? (Genesis 37:28) | |
| 14 | What's the answer when you take the number of years the Israelites wandered in the wilderness and multiply by the number of times Jesus fed a multitude of people with a pittance of food? | |
| 15 | What's the answer when you take the number of chapters in Genesis and multiply by the number of times Jesus asked Peter if he loved Him in John 21? | |

Your Name Here...

## Kids who did the Coloring

Crasslin Devona / Reagan Shan /Hartlyn Herchil
Jania Preni / Johan Sanjo / Rishon Yojit /
Ridhun Yojit / Chris Gabriel / Eion Jayden
Jeremiah / Jemima

## Kids who did the Spot Difference

Eric Aaron / Reagan Shan / Johan Sanjo
Jason Eric / Ridhun Yojit / Eric Jayden
Jeremiah / Jemima

## Kids who did the Word Search

Roshan / Eric Aaron / Johan Sanjo
Jason Eric / Eric Jayden
Jonathan / Jeremiah

## Children who successfully did Bible Cross Word

Roshan / Eric Aaron / Shelbino
Jason Eric / Eric Jayden / Joshua
Angelin / Annlin / Jonathan

## Children who successfully did the Bible Quiz

Roshan / Shelbino / Eric Aaron / Jason Eric
/ Dennis / Annlin / Angelin / Joshua
Jonathan

# வேத வினா-விடை போட்டி
## (ஒபதியா, யோனா, மீகா)

1) இஸ்ரவேலை ஆளப்போகிறவர் எங்கிருந்து வருவார் ?

2) என் சத்ருவே, எனக்கு விரோதமாய்ச் ____________; நான் விழுந்தாலும் ____________________

3) மீகா யாருக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் உரைத்தார்?

4) யோனா நினிவேக்குள் பிரவேசித்தபோது அந்த நகரம் எப்படிப்பட்ட நகரமாயிருந்தது?

5) கடலில் பெரிய கொந்தளிப்பு உண்டானபோது, யோனா செய்துகொண்டிருந்தது என்ன?

6) கர்த்தர் உன்னிடத்தில் எதை கேட்கிறார்?

7) சீயோனிலிருந்தும், எருசலேமிலிருந்தும் வெளிப்படுவது எது?

8) அக்கினியும், அக்கினிஜுவாலையுமாயிருப்பவர்கள் யார்?

9) கர்த்தர் நம்முடைய பாவங்களை எங்கே போட்டுவிடுவார்?

10) நினிவே கவிழ்க்கப்பட்டுபோம் என்று யோனோ சொன்னபோது நினிவே ஜனங்கள் செய்தது என்ன?

**கடந்த மாதத்திற்கான விடைகள்**

1.ஆமோஸ் 7:12
2.ஆமோஸ் 3:7
3. யோவேல் 2:11
4.ஆமோஸ் 2:1
5.ஆமோஸ் 8:12
6.யோவேல் 3:17
7.யோவேல் 1:13
8.ஆமோஸ் 4:9
9.ஆமோஸ் 1:1
10.ஆமோஸ் 7:7

**Mar'2020**
**விடை எழுதியவர்கள்**

திரு . ஜெயபிரதீப் கிறிஸ்டோபர்
திரு. M.C கிறிஸ்டோபர்
திருமதி. ஜமுனா ராணி
திருமதி. ராதிகா செல்வகுமார்
திருமதி. ஜெயந்தா ஜாண்
திருமதி. ஜெயின் ராஜவேல்
திருமதி. அகஸ்டா லாரன்ஸ்
திருமதி. பிப்லின் நெல்சன்
திருமதி. ஹெப்சிபாய் நேசமணி
திருமதி. ரோஸ்லின் பாலாஜி
திருமதி. ஷாலினி கிங்சிலி
திருமதி. பெட்ரிஷியா ஜேசன்
திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல்
திருமதி. பமீலா டேனியல்
திருமதி. ஷெரின் டியென்ஷன்
செல்வி. ஜெரின் மகதலேன்
திருமதி. எபென் A. பிரசாத்
திருமதி. சிந்துஜா சதீஷ்



## பிறந்தநாள் ஆசரிப்போர் Birthday Celebrants

| | |
|---|---|
| 01-Apr | Mrs. Olivia Sherin W/o Mr. Jeremiah Kingston |
| 02-Apr | Mr. Blessin Paul S/o Mr. Justin Oliver |
| 02-Apr | Baby. Aaliya B. Babina D/o Mr. Babu Abraham |
| 03-Apr | Mr. Alvin Kumar Asirmanns |
| 03-Apr | Mstr. Alan Manis S/o Mr. Alvin Kumar |
| 04-Apr | Mstr. Regan Shah S/o Mr. Balaji Ramaiyan |
| 06-Apr | Mr. Herchil Harish |
| 09-Apr | Mr. A Yobu |
| 09- Apr | Mrs. Princy Ashok W/o Mr. Ashok Daniel |
| 09-Apr | Dr. Pradeev Raj |
| 13-Apr | Mrs. Prema Ruth. T W/o Mr. David Johnson Premkumar |
| 14-Apr | Mrs. Angel Christopher W/o Rev. Christopher Rajendran |
| 17-Apr | Mrs. Shelly Kurian W/o Dr. Shino Mathew |
| 17-Apr | Ms. Diniya Sunshine D/o Mr. D. Rajavel |
| 21- Apr | Mr. Babu Abraham |
| 28-Apr | Mr. M. Santhosh Joel Kumar |
| 29- Apr | Mr. Daniel Durai Singh |
| 30-Apr | Ms. S.M Sherin Shah D/o Mr. Silvester Solomon |
| 30-Apr | Mr. Mohana Kumar R |

## திருமணநாள் ஆசரிப்போர் / Wedding Anniversary


| | |
|---|---|
| 05- Apr | Mr. Kingsly Stoobert & Mrs. Shalini Vimala |
| 10- Apr | Mr. Baskar Rajaram & Mrs. Angelin Nalini |
| 13- Apr | Mr. Sunith Samuel & Mrs. Shiby Angel |
| 19- Apr | Mr. Nelson Sopitha Raj & Mrs. Biblin |
| 26- Apr | Mr. Melbin Paul & Mrs. Shally |

**என்னாலே உன் நாட்கள் பெருகும்; உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும்.**

நீதிமொழிகள் 9:11

# நமது சபை உறுப்பினர்களை தெரிந்து கொள்வோம்

| CSI Tamil Parish Family No: 100 | Mobile No: 052 121 8050 |
|---|---|
| Mr. Sankaran Chinniyan (Head) | |
| Mrs. Kalyani (Wife) | |
| Mr. Lokesh (Son)<br>Mr. Naveen (Son)<br>Baby. Abiya (Daughter) | |
| Location in India:<br>Vellai Nager, Thrangambadi PO<br>Nagapattinam Dt. Tamilnadu | |

| CSI Tamil Parish Family No: 101 | Mobile No: 056 381 0472 |
|---|---|
| Mr. Antony Jesu Rajan (Head) |  |
| Mrs. Jamuna Rani (Wife) | |
| Mstr. Eric Aaron (Son) | |
| Location in India:<br>Vadakangulam<br>Thirunelveli, Tamil Nadu | |

| CSI Tamil Parish Family No: 103 | Mobile No: 050 230 6221 |
|---|---|
| Mr. Dienshan (Head) |  |
| Mrs. Divya Sherrin Dienshan (Wife) | |
| Location in India:<br>Near St Antony's Church, Kurusadi,<br>Nagercoil, KK Dist, Tamil Nadu<br>India | |

| CSI Tamil Parish Family No: 104 | Mobile No: 050 285 1986 |
|---|---|
| Mr. Daniel Durai Singh (Head) |  |
| Mrs. Pamela Rachel (Wife) | |
| Mstr. Jason Eric (Son)<br>Mstr. Chris Gabriel (Son) | |
| Mrs. Bhuvaneshwari | |
| Location in India:<br>Jeyam Nager, Radha Krishna St.,<br>Sathuvachary, Vellore, Tamilnadu | |



# கொரோனா...

கொரோனா'வினால் பாதிக்கப்பட்டோர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் குணமாக ஜெபிப்போம்.

பாதிக்கப்பட்டோர் அதிகரித்துக் கொண்டிருப்பது நிறுத்தப்பட தேவனிடத்தில் கெஞ்சி ஜெபிப்போம்.

இந்த கொடூர நேரத்தில் பணிபுரியும் மருத்துவ குழுவினரின் பாதுகாப்பிற்காகவும், அவர்களின் சுகத்திற்காகவும்,

கொரோனா பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில்; பொதுமக்கள் அரசின் சட்டத்திட்டங்களுக்கு கீழ்ப்படியவும்,

மக்களையும், பொருளாதாரத்தையும் முடக்கிவரும் கொரோனா வைரஸ் கிருமிகள் முற்றிலும் அழிக்கப்பட ஜெபிப்போம்.

ஊரடங்கு உத்தரவின் காரணமாக
தினக்கூலிகள், ரோட்டோரத்தில் வாழும் ஆதரவற்ற மக்களின் வாழ்வாதாரம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலை மாற ஜெபிப்போம்

கொரோனோ பாதிப்பு குறைந்து, மக்கள் தங்கள் இயல்பு வாழ்க்கைக்கு சீக்கிரம் திரும்ப தேவனிடம் மன்றாடுவோம்

ஒருவேளை உணவு கூட இல்லாமல் பசி, பட்டினியால் பாதிக்கப்படுவோர் நம் தேசத்தில் அநேகம். இதற்காக அரசு தீவிர நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

---



# உயிர்த்தெழுந்தார் இயேசு...

வானதூதர் பணிந்து போற்றும்
விண்ணின் தேவ மைந்தன்! – புவிக்கு
தானாய் வந்து பிறந்து
தன்னின் ஜீவன் தந்தார்!
ராஜாதி ராஜன் இயேசு உலகில்
தச்சனின் மகனாய்ப் பிறந்தார்!
தேவாதி தேவன் இயேசு உலகில்
தரித்திரக் கோலம் கண்டார்!

மன்னாதி மன்னன் இயேசு உலகில்
மானிக் கஷ்டம் கண்டார்!
கர்த்தாதி கர்த்தர் இயேசு உலகை
காத்திடத் தன்னுயிர் தந்தார்!
அன்பு அறிந்த இனிய இயேசு
அனைவருக்காய் மனமுருகினார்!
பண்பு அறிந்த பரமன் இயேசு
பாவம் கண்டு கோபமுற்றார்!

நட்பு அறிந்த நண்பர் இயேசு
நண்பருக்காய் கண்ணீர் விட்டார்!
மாண்பு அறிந்த மன்னர் இயேசு
மனிதருக்காய் உயிரை விட்டார்!

மனிதர் படும் பல கவலை
மன வேதனை அனுபவிக்க- நமை
புனிதர் ஆக்க நமது சாபம்
பாவம் நோய்கள் தீர்க்க
இனிதாய் இருந்த விண் வாழ்வதனை
இமைப் பொழுதில் உதறி விட்டு
தனியாய் வந்து புவி வாழ்வு வாழ்ந்து
தன்னுயிரைத் தானே ஈந்தார்!

சாபம் தீர்க்க சரித்திரம் பிளக்க
சாதாரண மனிதனாய் வந்தார்! – நம்
பாவம் போக்க பவித்ரம் கொடுக்க
பாடுகள் வதைகள் பட்டார்! – நம்
ரோகம் நீக்க சவுக்கியம் பெருக்க
இரட்சகர் உயிரை விட்டார்! – மோட்ச
லோகம் சேர்க்க நித்தியம் சேர்க்க
உயிரோடு எழுந்தார் இயேசு!

## Easter Joy

Jesus came to earth,
To show us how to live,
How to put others first,
How to love and how to give.

Then He set about His work,
That God sent Him to do;
He took our punishment on Himself;
He made us clean and new.

He could have saved Himself,
Calling angels from above,
But He chose to pay our price for sin;
He paid it out of love.

Our Lord died on Good Friday,
But the cross did not destroy
His resurrection on Easter morn
That fills our hearts with joy.

Now we know our earthly death,
Like His, is just a rest.
We'll be forever with Him
In heaven, where life is best.

So we live our lives for Jesus,
Think of Him in all we do.
Thank you Savior; Thank you Lord.
Help us love like you!

| நமது மிஷினரி ஊழியத்தேவை | | |
|---|---|---|
| மிஷனரி பெயர் | திரு. சூரிபால் சதா | திரு. கிறிஸ்டோபர் |
| பணித்தளம் | நீலமங்கலம்,<br>கள்ளக்குறிச்சி மாத்தூர் | மேல்முத்தானூர்<br>குருகிலாமூர் |
| ஸ்பான்ஸர் தொகை | AED 450/– Month | AED 450/– Month |

**இணைந்து மிஷனரி ஊழியத்தை கட்டுவோம் வாருங்கள்.**
**ஒரு குடும்பமாகவோ அல்லது பல குடும்பங்கள் ஒன்று சேர்ந்து மிஷனரிகளை தாங்க உங்களை அன்போடு அழைக்கிறோம்.**

# DAILY BIBLE READING 2020

**"Your word is a lamp to my feet and light for my Path"**

## APRIL

| | | |
|---|---|---|
| 1 2 Samuel 1 – 3 | 11 1 Kings 6 – 7 | 21 2 Kings 9 – 10 |
| 2 2 Samuel 4 – 7 | 12 1 Kings 8 – 9 | 22 2 Kings 11 – 13 |
| 3 2 Samuel 8 – 11 | 13 1 Kings 10 – 12 | 23 2 Kings 14 – 16 |
| 4 2 Samuel 12 – 13 | 14 1 Kings 13 – 15 | 24 2 Kings 17 – 18 |
| 5 2 Samuel 14 – 16 | 15 1 Kings 16 – 18 | 25 2 Kings 19 – 21 |
| 6 2 Samuel 17 – 19 | 16 1 Kings 19 – 20 | 26 2 Kings 22 – 23 |
| 7 2 Samuel 20 – 22 | 17 1 Kings 21 – 22 | 27 2 Kings 24 – 25 |
| 8 2 Samuel 23 – 24 | 18 2 Kings 1 – 3 | 28 1 Chronicles 1 – 2 |
| 9 1 Kings 1 – 2 | 19 2 Kings 4 – 5 | 29 1 Chronicles 3 – 4 |
| 10 1 Kings 3 – 5 | 20 2 Kings 6 – 8 | 30 1 Chronicles 5 – 6 |

This reading plan will guide you through all 66 books of the Bible in the coming year.


**Don't Say "God is Silent" When your Bible is Closed…**

**"தேவன் அமைதியாயிருக்கிறார்" என்று சொல்லாதீர்கள் உங்கள் கையிலுள்ள வேதாகமம் மூடியிருக்கும் போது...**




# C.S.I TAMIL PARISH, ALAIN- UAE

## CHURCH ANNIVERSARY



EDITOR
REV. M. CHRISTOPHER RAJENDRAN BSC., BD., MSC. (PSY)
THE PRESBYTER, CSI TAMIL PARISH, ALAIN, UNITED ARAB EMIRATES
POST BOX. 67747 | TEL: +971 (3) 755 9630 | MOB: 056 7105 082
**Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR PRIVATE CIRCULATION**